Australian Government
Department of Agriculture, Water and the Environment

# தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் (Product Emissions Standards): சில்லறை வர்த்தகர்களுக்கான தகவல்கள்




## வெளிப்புற மின் சாதனங்களை அல்லது கடல்சார் எந்திரங்களை ஆஸ்திரேலியாவில் விற்கிறீர்களா?

ஆம் என்றால், ஆஸ்திரேலிய அரசின் நச்சுப் புகை உமிழ்வுச் செந்தரங்கள் உங்களைக் கட்டுப்படுத்தும். நீங்கள் கட்டுப்பட்டு நடப்பதை உறுதிசெய்ய நீங்கள் எடுக்க வேண்டிய படிநிலைகள் உள்ளன.

வெளிப்புற மின் சாதனங்கள் மற்றும் கடல்சார் எந்திரங்களுக்கான நச்சுப் புகை உமிழ்வுச் செந்தரங்கள் கடந்த ஜனவரி 2018-லிருந்து அமுல்படுத்தப்படுகின்றன. இவை ஆஸ்திரேலியாவை வெளிப்புற மின்சாதனங்களையும் கடல்சார் எந்திரத் தயாரிப்புகளையும் ஒழுங்குபடுத்தும் பிற நாடுகளுக்கு இணையாக்குகின்றன. அதாவது இந்த நாளிலிருந்து:

- **1 ஜூலை 2018**—அதிகமாக மாசுபடுத்தும் புதிய வெளிப்புற மின் சாதனம் மற்றும் கடல்சார் எந்திரங்களை ஆஸ்திரேலியாவில் இனி இறக்குமதி செய்ய இயலாது
- **1 ஜூலை 2020**—அதிகமாக மாசுபடுத்தும் புதிய வெளிப்புற மின் சாதனம் மற்றும் கடல்சார் எந்திரங்களை ஆஸ்திரேலியச் சந்தையில் இனிமேல் பயன்பாட்டுக்கு அளிக்க இயலாது. இந்தத் தேதியிலிருந்து, ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஐரோப்பிய சான்று பெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் யூரோ ஸ்டேஜ் V உமிழ்வுத் தரங்களுக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

யூரோ ஸ்டேஜ் II உமிழ்வுத் தரங்களின்படி சான்றுபெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் வரும் 30 ஜூன் 2021-வரை ஆஸ்திரேலியாவிற்கு தொடர்ந்து வழங்கலாம், அதற்குப் பிறகு, யூரோ ஸ்டேஜ் V தயாரிப்புகளை மட்டுமே சப்ளை செய்ய முடியும்.

## இந்தச் செந்தரங்கள் எந்தத் தயாரிப்புகளுக்குப் பொருந்தும்?

செந்தரங்கள் பின்வருவனவற்றிற்குப் பொருந்தும்:

- லான் மூவர்ஸ், ரைட்-ஆன் மூவர்ஸ், மல்சர்ஸ், பிரஷ் அல்லது லைன் கட்டர்கள், ஜெனரேட்டர்கள், பம்புகள், செய்ன்சா-க்கள் மற்றும் ஜெனரேட்டர்கள் மற்றும் பம்புகள் போன்ற படகுகளில் உள்ள துணை எந்திரங்கள் உட்பட வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் 19 கிலோவாட் மற்றும் அதற்குக் கீழ் உள்ள ஸ்பார்க் இக்னிஷன் எந்திரங்கள்
- அவுட்போர்டு எந்திரங்கள், தனிப்பட்ட வாட்டர்கிராஃப்ட், மற்றும் ஸ்டெர்ன்டிரைவ் அல்லது இன்போர்டு எந்திரங்கள்உட்பட. கடல் கலங்களில் பயன்படுத்தப்படும் ஸ்பார்க் இக்னிஷன் எந்திரங்கள்

செந்தரங்களுக்கு உட்பட்ட தயாரிப்புகளின் பட்டியலுக்கு www.environment.gov.au/protection/air-quality/emissions-standards-ஐ பார்க்கவும்.



## நான் என்ன செய்ய வேண்டும்?

- இறக்குமதி செய்யப்படும் மற்றும் விற்பனைக்காக உள்ள புகை உமிழ்வுச் செந்தரங்களுக்கு உட்பட்ட எல்லாத் தயாரிப்புகளிலும் ஆஸ்திரேலிய சான்றளிப்போ அல்லது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றளிப்போ அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency), கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board), சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (Environment and Climate Change) கனடா, அல்லது ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிடமிருந்து பெற்றிருப்பதை உறுதி செய்யுங்கள்
- புகை உமிழ்வுச் செந்தரங்களுக்கு உட்படாத தற்போது இருக்கும் எல்லா இருப்புகளும் 1 ஜூலை 2020-க்கு முன்னர் விற்கப்பட்டு விடுவதை அல்லது விற்பனையிலிருந்து அகற்றப்படுவதை உறுதி செய்யுங்கள்.

**1 ஜூலை 2020 முதல்:**

- இணக்கமான வெளிப்புற மின் சாதனங்களை அல்லது கடல்சார் எந்திரங்களை மட்டும் ஆஸ்திரேலியாவில் விற்பதை உறுதிசெய்யுங்கள்.

நச்சுப் புகை உமிழ்வுச் செந்தரங்கள் பற்றிய மேலும் அதிகத் தகவல்களுக்கு www.environment.gov.au/protection/emissions-standards என்ற எமது வலைதளத்தைப் பாருங்கள், அல்லது நீங்கள் மின்னஞ்சல் செய்ய வேண்டிய முகவரி productemissions@awe.gov.au



ENV308.0420